உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

## முப்பத்துநான்காந்தொகுதி.

**Vol. 34.**

தாது—ஈசுவர ௵

1936 — 1937.

பத்திராசிரியர் — திருநாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

# முப்பத்துநான்காந்தொகுதியுள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|
| எடர், இண்டர் (அண்டர்), இடையர்:— | சுவாமி ஞானப்பிரகாசர் (நல்லூர்.) | ௩௫ |
| ஓர் அநுதாபக் குறிப்பு:— | ஸ்ரீமத். கோ. வா. சாரங்கபாணி ராமாநுஜதாசர். | ௨00 |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ஸ்ரீமத். ராவ்ஸாஹெப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். | ௧௩, ௯௭, ௧௨௯, ௧௫௫ |
| கம்பராமாயணசாரம்:— | ஷை ஷை | ௨௩௫, ௨௪௩, ௨௭௫, ௩௩௧, ௩௬௩ |
| தமிழ் எனும் சொல் வரலாறு:— | ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (HONS.) | ௫௩ |
| தமிழ் நூல்களும் கல்வெட்டுக்களும்:- | ஸ்ரீமத். வை. சுந்தரேசவாண்டையார் | ௨௫ |
| தமிழ்வழக்கு:— | திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர். | ௨௯௧ |
| தமிழின் சிறப்பியல்பு:- | ஷை ஷை | ௯௩ |
| திருப்புல்லாணியெம்பெருமான் வாகனக் கவிகள் முதலியன:- | ஸ்ரீமத். அபிநவகாளமேகம் ஸ்ரீ அநந்த கிருஷ்ணையங்கார். | ௩௪௭ |
| நியாயப்பிரவேச மணிமேகலை:— | திரு. நாராயணையங்கார். (பத்திராசிரியர்) | ௧, ௪௧, ௮௧, ௧௨௧, ௧௪௫, ௧௭௭ |
| பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலர்சரிதம்:— | ஸ்ரீமத். சி. கு. நாராயணசாமி முதலியார். | ௩௮௭ |
| பழையவற்றிற்பழைய குறள்வெண்பாக்கள்:- | சுவாமி ஞானப்பிரகாசர், (நல்லூர்). | ௨௨௯ |
| பனையின்பெயர்கள்:— | சுவாமி ஞானப்பிரகாசர், (நல்லூர்). | ௭௫ |
| பாஞ்சராத்திரம்:- | ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார். B.A., B.L. | ௨௧௯, ௨௫௧, ௨௮௩, ௩0௭, ௩௪௯, ௩௭௫ |
| பாரதிய ஸாஹித்ய பரிஷத்தின் முதல்வருஷமஹாநாட்டு வரவேற்புப்பிரசங்கம்:— | ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர். | ௨0௩ |
| புல்லையந்தாதி:- | ஸ்ரீமத். வித்வான். ரா. இராமையங்கார். | ௧௬௭, ௨௬௭, ௨௯௫, ௩௨௧, ௩௫௪ |

பூனையும் பூசையும்:—சுவாமி ஞானப்பிரகாசர், (நல்லூர்). கஅ௩

மங்களவாழ்த்து:—ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை. ௩கக

மதிப்புரை:— ககஎ, உ0க, உ௩அ, உசு௫, ௩௩0, ௩அஎ

மாறனலங்காரத்திலுள்ள சில செய்திகள்:— } ஸ்ரீமத். L. ஆதிநாதபிள்ளை. கசக

யவனர்வரலாறு:— } ஸ்ரீமத். த. இராமநாதபிள்ளை B.A. (Lond.) க௮௫, உகஎ, உசுக, ௩0க, ௩உ௩

ரமாமணி:- } ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார், B.A., B.L. ௩க, சு௫, க0எ

வாழ்த்துப்பா:— } ஸ்ரீமத். அபிநவகாளமேகம் ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார். ௩சுக

---

# அநுபந்தம்.

## I. விஷயங்கள்.

மஹாமாட்சிமைதங்கிய ஆறாவதுஜார்ஜு சக்கரவர்த்தியவர்கள் மகுடாபிஷேக மங்களவாழ்த்து:— பகுதி எ

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—பகுதி க0. பக். 1—15

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—பகுதி க0. பக். 1—2

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:— பகுதி உ, சு

---

## II. நூல்கள்.

[முற்றுப்பெற்றவை.]

சிராமலைக்கோவை (குறிப்புரையுடன்):— } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர். பகுதி. க, ௩, ச

மத்யம வியாயோகம்:— } ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார் B.A., B.L. பகுதி. ச, ௫, சு

---

[முற்றுப்பெறாதவை.]

சந்திரகுப்தன்:— } ஸ்ரீமத். N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., B.L. பகுதி. அ—கஉ

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். பகுதி. க, உ, ௫—கஉ

---

என்னை நினைந்து அவன் வருந்ாதது காத்தலும் உன்கடமைதான். அகத்துறு துன்புக் கமிழ்தெனு மருந்தாய்த் துயரோட்டி நலனூட்டுவதே காதலியின் கடமையன்ருே?

சுலோசனை:—நீங்கள் செல்லும் கங்காயாத்திரைக்கு யானும் வருவேன்.

யமுனை:—சந்திரன் இங்குவரின் நம்மிருவரையும் காணுது மனந்தளர்வனே.

சுலோசனை:—உங்கள் குமாரரும் மேற்குநோக்கித்தான் சென்றிருப்பார். நாம் எதிரில் சந்திக்கலாம்.

யமுனை:—அது என்ன நிச்சயம்?

சுலோசனை:—சந்தேகமில்லை.

யமுனை:—சிறுமியாகிய நீ என்னுடன் வருதல் தகுதியன்று. பொதுவிடம் பலவற்றினும் தங்கிச்செல்லும் தனியாத்திரையில் பருவப்பெண்ணான நீ உடன்வரல் தகாது.

சுலோசனை:—ஒரு சிறுவன் உம்மைத் தொடர்ந்துவரின் உமக்கு உதவியாயிருப்பானன்ருே?

யமுனை:—உன் அழகின்மிகுதியாலும் அங்கங்களின் மென்மையாலும் யாரும் எளிதில் உன்னைப் பெண்ணென்று தெரிந்துகொள்ளல்கூடும்.

சுலோசனை:—உம்மைவிட்டகலாது உமக்குப் பணிவிடைசெய்திருப்பின் என்னை யார் நெருங்கியறியப்போகிருர்கள்?

யமுனை:—உன் தமயன் மிக்க துயரத்தையடைந்து வருந்துவனே. உடன்பிறப்பின் மேம்பட்ட நண்பனும் இன்றித் தன் அருமைத்தங்கையையும் பிரிந்து அவன் எங்ஙனம் உயிர்வாழ்வன்?

சுலோசனை:—யான் இரண்டு மூன்றுமாதத்தில் திரும்பிவிடுவதாக அவருக்கு ஒரு கடிதத்தை எழுதிவைத்துவிட்டுவந்துவிடுகிறேன். அக்காலம்வரை நீங்களும் இல்லாமையால் அவர் சந்திரன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும் எழுதிவைக்கிறேன். அவர் அங்ஙனம் இருப்பார்.

யமுனை:—நீ சொல்வதை மறுக்க என்னாலாகாது. உன்விருப்பப்படி செய்.

சுலோசனை:—இன்றிரவே புறப்பட்டுவிடுவோம்.

யமுனை:—நீ குழந்தைத்தனமாய் என்னுடன் புறப்படுவது சரியன்றென்று என்மனத்தில் தோன்றுகின்றது.

சுலோசனை:—உமக்கு இன்னொருமகனிருப்பின் அவனை அழைத்துச்செல்லமாட்டீரா? அப்படி நினைத்துக்கொள்ளும். யான் இரவில் வருகிறேன். சன்னத்தமாயிரும். [விடைபெற்றுச் செல்லுதல்.]

---

## அங்கம் - III.

### களம் - 1.

---

இடம்:—சிந்துநதிக்கரையில் அலக்ஷயேந்திரன் படமாடம்.

பாத்திரங்கள்:—அலக்ஷயேந்திரன், புருஷோத்தமன், சேனுபதிகள், சேவகர்கள் முதலியோர்.

அலக்ஷயேந்திரன்:—புருஷோத்தமரே! நம் தூதர்கள் சொல்லியதைக் கேட்டிருந்தீரா? மகதராஜன்சொற்கள் என்மனத்தை யீட்டிபோற் குத்துகின்றன. நான் செய்யும் யுத்தத்தைப் பழித்து எனக்குத் தீங்குநேருமென்று சொல்லக்கூடிய முடிமன்னனொருவன் படிமிசை உயிர்வாழ்வனோ? அவன் திறத்தை இன்றே அறிவேன்.

சேனுபதி:—பாரசீகராஜ்யமுழுவதையும் ஒருகணத்தில் வென்று கைக்கொண்ட உங்களுக்கு இது ஒரு பெரிதா?

புருஷோத்தமன்:—மகதன்பெருமையை நீங்கள் அறியீர். அவன் தேசத்தின் செழிப்பும் குடிகளின் ஊற்றமும் படைகளின் வலியும் செல்வத்தின் மிகுதியும் யாரால் அளவிடமுடியும்? அவனே ஒரு பெரிய போர்வீரன். அவன் சேனைத்தலைவரும்

நேபாளம் காந்தாரம் முதலிய மிலேச்சர்களும் முரடர்களும் வசிக்கும் தேசங்களில் நெடுநாள் போர்புரிந்து தேர்ந்தவர்கள்.

சேனுபதி:—அரசே! அவர்கள் படைவலியை நம் தூதர்கள் கணக்கிட்டுவந்திருக்கிறார்கள். ஐம்பதாயிரம் தேர்களும் லக்ஷம் யானைகளும் 2 லக்ஷம் குதிரைகளும் ஐந்து லக்ஷம் காலாட்களும் இவரறிந்தமட்டில் மகதனுக்கு இருக்கின்றனவாம். இவைதவிர எல்லைக்காப்புச் சேனைகளும், கோட்டைகாக்கும்படைகளும் சிற்றரசர்படைகளும் மிகுந்திருக்கின்றனவாம். தூதர்தலைவரே! நான் சொன்னது சரிதானே?

தூதர்தலைவன்:—ஆம். அது மட்டுமேயன்றி அவன் நாட்டு வில்லாளிகளின் திறம் மிகவும் மெச்சத்தக்கது. புடைத்தெழு தோளும் துடித்தெழு வீசையும் உடையராய் அவர்கள் தம்மினும் உயர்ந்தவில்லைத் தரையில் ஊன்றி அடியை இடக்காற்பெருவிரலால் மிதித்துத் தலையை இடக்கையால் இழுத்து வளைத்து நாணினை இறுகச்சுற்றி அயின்முகக்கணைகளும் அரைமதிவாளிகளும் கோத்து, மரங்கள் கிழியவும் கற்கள் பிளக்கவும் எய்யும் வல்லமையுடையவர். இருப்புக்கவசங்களைத் தகர்த்தும் தேர்களை உடைத்தும் வீரர்களைத் தலைதுணித்தும் அவர்களம்புகள் தடையின்றி மேற்செல்லும். கதையெடுத்துப் பொருவோர்கையாற் சிதைபடாதபொருள் பிரமன்படைப்பில் ஒன்றுமில்லை. கோட்டைகளைத் தகர்க்கவும் மதில்களை யிடிக்கவும் பூமியில் சுரங்கங்கள் வைக்கவும் அளவிறந்த பொறிகள் அவர்கள் நாட்டில் உள. பகைவரை மறைந்திருந்தாவது பொறிகள்வைத்தாவது கொல்லும் வழக்கமே அவர்நாட்டில் இல்லையாதலின், அவைகளுக்கு உதவக்கூடிய ஆயுதங்களொன்றும் அவர் அறியார். துன்புற்றோர்க்குதவலும் இரந்தோர்க்களித்தலும் எளியோரை ஆதரித்தலும் ஆகிய இவற்றை உடன்பிறந்த குணங்களாக்கொண்டு அறமும் ஆண்மையும் சேர்ந்திருக்கப்பெற்றுளர். அவர் நடுவில் நான் வதிந்தநாள்களை என் ஆயுள் உள்ளவளவும் மறவேன்.

சேவகன்:—[தொழுது] அரசே! நம் படமாடவாயிலில் மகதன் தூதர்கள் காத்திருக்கிறார்கள்.

அலக்ஷயேந்திரன்:—அவர்களை உடனே உள்ளே அழைத்து வா.

தூதர்கள்:—[வணங்குதல்.]

தூதர்தலைவன்:—ஆண்டகாய்! எம்மரசன்வாழ்த்தையும் எம் வந்தனத்தையும் ஏற்பீராக.

அலக்ஷயேந்திரன்:—தூதர்களே! நல்லசமயத்தில் வந்தீர்கள். நாங்கள் உங்கள் நாட்டைப்பற்றித்தான் உரையாடிக்கொண்டிருக்கிறோம்.

தூதர்தலைவன்:—அதுவும் எங்கள் பாக்கியந்தான். எங்கள் மன்னர் கட்டளையின்படி நாங்கள் இன்றைக்கு முப்பதாம்நாள் உங்கள் மறுமொழிபெற்று எங்கள் ஊர்போய்ச் சேரவேண்டும்.

அலக்ஷயேந்திரன்:—உங்களுக்கு யான் சொல்லவேண்டிய மறுமொழி என்தூதர்களால் உம்மரசர்பக்கல் சொல்லப்பட்டதுதான்.

தூதர்தலைவன்:— அரசே! சினங்கொள்ளாதீர். தர்மத்தைச் செகுத்துப் பாபம் மேம்படாதென்பது உமக்குத் தெரியாதா? தாமரைகள் மலர்ந்து மணம் வீசவும், வண்டுகள் பாடவும், அன்னங்கள் சஞ்சரிக்கவும், மீன்கள் மிளிரவும் பக்கத்தில் மயில்கள் ஆடவும் அழகுடன் விளங்கும் பொய்கையில் ஆசையுடன் இறங்கி அதைக் கலக்கி அழகழித்துத் தானும் அங்குள்ள முதலைவாய்ப் பட்டழியும் மதயானைபோல் அறநினைந்தொழுகுமான்றோர் பலர் வதியும் எங்கள் நாட்டையும் ஊறுசெய்து நீரும் சீரழிதல் மேன்மையாகாது.

தெய்வமே பரவி மெய்வழி தெரிந்தாங்
குய்யுமா றுன்னியேக் காலும்
கைதவ மகற்றிக் களிப்புறு மனத்தோ
டைவகைப் புலன்வலி யறுத்துப்
பெய்வளைக் கையர் பெட்பினின் மயங்கா
தெய்தக விதிமுறை யாற்றி
நைவுறு முடலால் ஞானமிக் குயர்ந்தோர்
நலிபல ருறையுநா டதுவே.

இத்தகையோர் உயிரிலும் உடலிலும் பற்றற்றமனத்தராய் வதியும்நாட்டில் நீர் வீண்போர்செய்து குற்றமற்றவர்களான எம் மரசர்குடிகளுக்குத் தீங்குவிளைக்க முயலவேண்டாவென்றும், அப்படி நீங்கள் முயன்றால் உங்களுக்கு மிகுந்த கேடுவருமென் றும் எம்மன்னர் சொல்லினர்.

அலக்ஷயேந்திரன்:—எனக்குக் கேடுவிளைக்க உங்களரசரால் ஆகாது. இவ்வாறுதான் பாரசிகனும் சொல்லி என்கையால் மாண்டனன். உங்கள் உபதேசம் எனக்கேன்.

தூதர்தலைவன்:—தர்மத்தைப் பாபம் வெல்லாதென்று நாங் கள் கூறவந்தது உபதேசமாகுமோ? எங்கள் நாட்டில் தர்மம் மலிந்திருட்பதோடு படைவலியும் மிகுந்துளது.

தூயவெண் முந்நூல் பூண்டு சுருதியின் கரைகள் கண்டு
தீயடு வேள்வி முற்றித் திரவியப் பற்று நீத்துக்
காய்சின மகற்றிக் கல்வித் துறைகடந் தறிவு முற்றி
யாயென வளிசெய் நெஞ்சத் தந்தணர்க் கரச னெந்தை.

இத்தகைய பிராமணோத்தமரின்வடிவமாய்த் தருமமே எங் கும் திரிதரும் எம் நாட்டை மாற்றரசர் வெல்லல் முடியாது. மேலும் எம்மரசன்படையினர்க் கெதிர்நிற்க உம்மாள்களால் முடியுமா?

நிழலினைச் சீறிக் கந்தை நெறித்தொடித் தீர்த்துத் தூணைக்
கழையெனச் செகுத்துக் காந்திக் கையெடுத் தலறி யோடி
மழைமத வருவி சோர வண்டினம் தொடர்ந்து செல்லப்
பொழிலிறுத் தடங்கிப் பாகின் புடைதொடர் கரிகள் சுற்ற.

எம்மன்னர் போர்க்கெழுந்து களங்கொள்ளின் உம்மவர் அவர் மாட்டுச்செல்லாது புறங்காட்டியோடுவர்.

அலக்ஷயேந்திரன்:—உங்கள் யானைப்படையின் திறத்தை நாம் புருஷோத்தமனுடன் செய்த போரில் அறிந்துகொண்டோம்.

தூதர்தலைவன்:—வங்காளத்தில் விலைப்படாமற் கழிபட்ட யானைகளை நீர் வெல்வதற்குப் பட்டபாடு எங்கள் நாடுமுழுதும் நகைக்கிடமாயிற்று. இன்னும் எம்முடைய மற்றைப்படைகளின் வலியையும் கேட்பீராக.

தூணியும் வில்லும் ஏந்தித் துணிவுடை மனத்த ராகி
ஆணையை யாற்றித் தத்தம் ஆருயிர் மதியா ராகி
ஆணவம் அரசர் தெய்வம் அன்புடை நாடென் றின்ன
பேணுதல் பெரிதாய் முந்தும் பெட்பினர் பெயர்ந்து செல்ல.

பால்புரை புரவி பூண்டு பகழிபெய் வீர ரேந்தி
மேலுயர் கொடியின் சீரை மாற்றல ராற்றல் தூற்றக்
கால்வழிக் கால்கள் மாளப் பால்படு படைகள் சிந்தக்
கோல்கொளும் சூதன் உந்தக் கொதித்தெழும் கொடித்தேர் சுற்ற.

விரைதரு பரியின் வீரர் வேலொடு வாளும் ஏந்தித்
தரைதரு துகள் கிளப்பித் தாரகைக் கணமறைத்து
நுரைதர மோதிச் சிந்தி நூறிடும் போதில் நீவிர்
திரைதரு கடல்வாய்ப் பட்ட செய்மணற் குன்றே யாவீர்.

புருஷோத்தமன் எங்கள் சிற்றரசர்க்குக் கப்பங்கட்டும் ஒரு நாட்டுத்தலைவருக் கீடாகான். எங்கள் வில்லாளிகளின் கணைகள் உங்கள் இருப்புச் சட்டைகளைக் கிழித்துப் பாயும் வலியுள்ளன. எங்கள் தேர்வீரர் பொருதுசெல்லும் வேகத்தில் உங்களுக்குப் போர்முகந்தெரியாது தலைதடுமாறிப்போகும். எங்கள் குதிரை வீரர்க் கெதிரில் உங்கள்படைஞர், பொங்கியெழும் கடலின் அலைகளின்கீழ் நெய்தற்பயிரென இருந்தவிடந்தெரியாது மறைந்தழிவர். இதுகாறும் வெற்றியும் கீர்த்தியும் பெற்றுவந்தநீர் இனி மேற்செல்லத்துணிவீராயின் வெற்றியும் கீர்த்தியும் மகதனுக்கு விட்டுவிட்டுப் பாவமும் பழியும் மாத்திரம் சுமந்து திரும்புவீர். குறுநாட்டுமீவந்தனுகிய பாஞ்சாலனையும் நாகரிகமற்ற காட்டுமக்களையும் வென்றதை வெற்றியாகக்கொண்டு மகதன்மாட்டுச் சீரழியாதீர்.

கானுறை கள்வர் தம்மைக் கடிந்ததோர் வலியைக் கொண்டு
மானிடர் ஏத்தும் மன்னன் மகதனை வெல்ல லாமோ
கூனுகிர்ச் சிங்கங் கொல்லும் குருளைமா னெனினு மற்றை
வானுயர் சரபத் தின்பால் வலியழிந் திறக்கு மன்றே.

அலக்ஷயேந்திரன்:—[சற்றுக் கலங்கி] சரி. நீங்கள் போய்வரலாம்.

தூதர்தலைவன்:—எங்கள் சக்கரவர்த்திக்கு நாங்கள் என்ன சொல்லுவது?

சேவகன்:—[தொழுது ஒரு ஓலையைக் கொடுக்க.]

அலக்ஷயேந்திரன் :— [அதைவாசித்துவிட்டுப் புருஷோத்தமரை நோக்கி] பாஞ்சாலரே! உம்முடைய சேனாதிபதி சத்ருஜித் நமக்கு ஒரு வீரரை அனுப்பியுள்ளார். [சேவகனைநோக்கி] சேவகா! இவ் வோலைகொணர்ந்தவரை உள்ளே வரவிடு.

சந்திரன்:—[பல சிற்றரசர்கள் பின்வரப் புகுந்து சற்றுத் தலைவணங் கிக் கைகுவித்து] அரசர்பெருமானே! என் அஞ்சலி ஏற்பீராக. என் தலைவர் சத்ருஜித்தின் ஆணைப்படி இந்நாட்டுத் தலைவர்களைப் புரு ஷோத்தமர்பால் சேர்ப்பிக்க வந்தேன். அது காரணமாக உம்மைக் கண்டது என் பெரும்பேறே. [புருஷோத்தமனிடம் ஒரு ஓலையைக் கொடுத்து] எம்மரசே! கப்பங்கொடாது காலந்தள்ளிவந்த இவர்க ளைப் பிணித்துவரும்படி தாங்கள் சேனைத்தலைவருக்கு உத்தரவு செய்திருந்தபடி இவர்களை உம்மடியிற் சேர்க்கிறேன்.

புருஷோத்தமன்:—[சிற்றரசர் தொழ ஓலையைவாசித்து] சந்திரரே! நீர் உம்முடையபெயருக்கு மாறாக இவர்களிடத்தில் சூரியனைக் காட்டிலும் வெம்மைவிளைத்ததாக உம்முடைய போர்வலியை மிக வும் மெச்சி எம் சேனைத்தலைவர் எழுதியிருக்கிறார். யானறிந்தமட் டில் அவர் ஒருவர் போர்வலியையும் மெச்சுகிற வழக்கமில்லை. அவரே இவ்வளவு புகழ்ந்துபேசத்தக்க உம்முடைய போர்வலி மிகவும் மேம்பட்டதாகவே யிருக்கவேண்டும்.

சந்திரன்:—அரசே! எம் தலைவர் என்னைப்பற்றிப் புகழ்ந்திருப் பின் அது என்னிடத்தில் அவர்வைத்திருக்கும்மிகுந்த அன்புபற்றித் தானிருக்கவேண்டும். அவருடன்சென்று அவர்பணித்ததைச் செய் ததுதவிர வேறெந்தவிதமும் யான் இந்தப்போரில் முயலவில்லை.

அலக்ஷயேந்திரன்:—தலைவன் பணித்ததையாற்றுதலே போர் வல்லார்க்கரிதென்பதும், அங்ஙனம் செய்துமுடித்தல்தான் மிகுந்தபோர்வலியென்பதும் உமக்குத் தெரியாதா! கடலின்விரிந்து உலகெலாம் வெல்லவல்ல என் சேனையில் அங்ஙனம் செய்யவல் லோர் சிலர்தாம் உளர். அவரே மேற்பதவிகளுக்குரியராய் என்பக்க லிருந்துதவுவர். ஆதலின் நீர் ஒரு பெரிய போர்வீரரே. மேலும், இவ்விளமைப்பருவத்தில் இவ்வளவுதிறம்வாய்தல் மிக அரிது. நீர் மகதநாட்டவரோ?

சந்திரன்:—ஆம். அரசே! எம் நாட்டில் அந்தணர் மறையும் வைசியர் வணிகமும் கற்பதுபோல் க்ஷத்திரியராகிய நாங்களும் இளம்பருவத்திலேயே தகுந்த ஆசிரியரிடம் தேகப்பயிற்சிசெய்து கொண்டு, பின் வில் வேல் வாள் என்னும் சிறந்த படைக்கல வகைகளிற் பயின்று, அதன்பின் யானை குதிரைகளை நடாத்தவும் தேரூரவும் தெரிந்துகொள்வோம். எம்மூரில் பிழைப்பற்றுவந்த என்னைக் கண்டு தாங்கள் மகிழ்கிறீர்கள். என்னினும் இளமையிலேயே தாம் தனிநின்றுபொருது பெரும்படையழிக்கும்வலியுள்ள வீரர் அளவிறந்தோர் அங்கு உளர்.

அலக்ஷயேந்திரன்:—[தூதர்தலைவனைநோக்கி] இவர்கள் அரசன் தான் தனியே பொருவதாய்ச் சொன்னானன்றோ?

தூதர்தலைவன்:—ஆம் அரசே!

சந்திரன்:—அவர் அங்ஙனம் செய்யவல்லவரே. இதினும் மிகப்பெரிய சேனையையும் அங்ஙனம் பொருதழிப்பர். உங்கள் இருப்புச்சட்டைகள் அவர் வாளின்முன் மின்னலின்முன் இருள்போற் பிளவுபடும். உங்கள் ஆயுதங்களெல்லாம் அவர் வயிரகவசத்திற்பட்டுக் கல்லின்மேல் விழும் மழைத்துளிகள்போற் சிதறுண்டு பயன்படாதுபோம். அவரேயன்றி இன்னும் அளவிறந்தோர் அவரினும் தேகப்பயிற்சியினும் படைப்பயிற்சியினும் மிகுந்தோர் எங்கள்நாட்டில் இருக்கின்றனர்.

அலக்ஷயேந்திரன்:—அப்படியாயின் அவர்வலியை நான் காணவேண்டும்.

சந்திரன்:—போர்முனையிற் காணவேண்டுமென்று நீர் ஆவல்கொண்டால் அது நஞ்சின் சுவையறிவதுபோல் கண்டபின் நீர் உயிருடனிருக்கமுடியாது. எம்மரசரோடு நேசஞ்செய்துகொண்டால் வீரர்பயிலும் சாலைகளிற் காணலாம்.

அலக்ஷயேந்திரன்:—நீர் அச்சாலையிற் பயின்றவர்தாமோ?

சந்திரன்:—ஆம். சிலகாலம்.

அலக்ஷயேந்திரன்:—உம்மைப் பரீக்ஷிப்போம். [தூதர்களை நோக்கி] தூதர்களே! நீங்களும் நாளை இதைப் பார்த்துவிட்டுச் செல்லலாம்.

---

2164 ஓங்கியதண் ணளியறந்தான் கலியுகமே
லடியிடவே யொற்றைத் தாளி
னீங்கிடரெய் துபுதளர்போ தினிலிறந்த
காலமெடுப் பவனே யாகிப்
பாங்குடைத்தன் னடுவுநிலை கொல்லாமை
வாய்மையெனும் பதமோர் மூன்றூற்
றூங்குவனென் றெதிர்கருதித் தாதையறந்
தாங்கியெனத் தாபித் தானே. (அ)

2165 *தழற்பாணி கறைகெழுவச் சிரபாணி
மிளிர்படிகத் தாமம் வேய்ந்த
நிழற்பாணி விழைந்தகமண் டலபாணி
முதலெவர்க்கு நிபனே யாப்வேய்ங்
குழற்பாணி கொடுதொறுவின் குழுவழைத்த
மழைமுகில்பார் குளிர்ப்பா னீன்ற
கழற்பாணி தனைப்புகழ்சக் கரபாணி
யனைத்துயிர்க்குங் களைக ணவான். (கூ)

2166 மறத்திகிரிப் படைதரித்த வருளாளன்
மலரினிற்றெண் மருந்திற் றோன்றுந்
திறத்திகிரிப் புளகமுலைச் சுவடணைவான்
பரனெனவத் திடந டாத்து
மறத்திகிரிப் படையினைக்கைக் கோடலிற்சக்
கரபாணி யாகி யாசைப்
புறத்திகிரிப் பொருப்பினுக்கப் புறத்திருடீர்
நிலவெழும்வண் புகழா னன்றே. (கo)

2167 பச்சுதரத் தகிலாண்டத் துயிர்க்கணமே
கோதகத்திற் படியா வண்ணம்
வைச்சுதரக் கொடுங்கனறாற் றுவகையோர்
புடைபதுக்கி மறித்து மீன்று
மொச்சுதரப் புவியினைமூ வடியெனத்தா
யவன்றனக்கே முழுது மாட்செ
யச்சுதர்தம் பெருமையையா ரறியாதார்
மூவுலகத் தடைந்து ளாரே. (கக)

2168 சீதரனே பரனெனுமத் திடம்பயின்று
மறைமுழுதுந் தெளிந்த கேள்வி
மூதுணர்வா ரடியவர்தம் மடியவரெம்
மடிகளெனு முத்தி சேர்ந்தும்
பூதவுடம் பழிவதல்லாற் புகமுடம்பு
பொன்றுது புவனி மீதுண்
டாதலினு லச்சுதனும் பெயர்திடனு
மெனுமவனுக் ககில மன்னே. (கஉ)

2169 மாந்தராற் சமைந்தபடை யாதுளவென்
றிகழ்ந்தொழிந்த வரங்கள் வாணி
காந்தரா லிசைந்தெழுதென் னிலங்கையர்கோ
னுயிர்செகுப்பான் கணையொன் றேவி
வேந்தர்வேந் தெனுஞ்சனகன் புதல்வியொடுந்
திருநகர்க்கு மீண்டோர்க் காட்செய்
சேந்தர்வாய் மையைப்புகழ்தற் கெளியதோ
வெணையனையார் சிறுசொற் கன்றே. (கங)

2170 பரனளித்த மூதண்டத் தயனமைத்த
பதிகள்பதி னலி னுள்ளா
ருரனளித்த வெஃகினெடு மார்கலிச்சூர்
தடிந்தவொரு மயில்வாழ் வெய்தி
வரனளித்த காந்தியுடைச் செம்மையொடு
நலத்தகைசால் வள்ளி யோனல்
அரனளித்த சேந்தனுமச் சுதனளித்த
சேந்தனுமொப் பாமென் பாரே. (கச)

2171 தங்கண்ணன் பிலராகிப் படைத்தழிப்போர்
தமைத்தொடர்ந்து சரத வாய்மை
பொங்கண்ணங் தழும்புபடப் புகழ்ந்திழிந்து
போவதல்லாற் புரைதீர் காவல்
எங்கண்ணன் றனக்கடிமைத் திறம்புரிவார்
மதம்பழிப்பா ரிகலைக் காய்ந்த
செங்கண்ணன் புகழ்புகுதாத் திசையுளவேற்
கதிர்புகுதாத் திசையுண் டாமே. (கரு)

2172 நஞ்சமே யெனத்தெறுநல் குரவடைந்தோர்
நல்குரவா னடுக்குற் றூர்கள்
தஞ்சமே சரணெனுமுன் முகமலர்ந்தின்
சொலிற்களிகூர் சால்பி னோடு
மஞ்சனீ ரெனவெதிர்கொண் டக்கணத்தங்
கவர்குறித்த தளித்தற் காகச்
செஞ்செவே யருள்புரிநோக் குடைமையிற்செங்
கண்ணனெனுந் திரைநீர் ஞாலம். (கசு)

2173 நீர்க்கழிவா ரிதிசுலவும் புவியனைத்து
மொருகுடைக்கீழ் நிழற்றல் போற்றி
வார்க்கழியா தெழுமுலையார் பொற்கலத்தேந்
தமிர்தினையும் வயின்வந் தேயேற்
பார்க்கழியா தவகையிற்பாத் தருந்தரசர்
பெருந்திருவென் பதுவு மல்லாற்
போர்க்கழியார் பெருந்திருவிற் களகையர்கோன்
பெருந்திருவும் புன்மைத் தாமே. (கஎ)

2174 கூற்றுவனிற் கொலைபயில்வன் களிற்றினிற்கொய்
யுளைப்பரியிற் கொடித்திண் டேரின்
மாற்றமுறச் செருக்களம்புக் கிகல்விளைப்போர்
போர்க்கழியா மரபி னாலும்
போற்றியவைம் பொறிவழிபுன் புலன்விளைக்கும்
போர்க்கழியாப் புரைநீர் ஞானந்
தேற்றமுறுந் திறத்தாலும் போர்க்கழியா
ரெனப்புணர்பேர் சிறந்த தன்றே. (கஅ)

2175 வேரியார் செழுங்கமலத் திருமார்பத்
திறைநிலையே விழைமெய்ஞ் ஞானச்
சீரியா ரடியவர்தம் மடியவர்தம்
மடியவர்க்காட் செய்யு மேன்மைக்
கூரியா ருயிர்க்குயிராம் போர்க்கழியார்
தவம்படிவங் கொண்ட தொன்றுங்
காரியார் பொருட்டினின்மே தினியடைந்த
பயன்றனக்கோர் கைம்மா றுண்டே. (கக)

2176 தீவணங்காட் டியநரகத் திடையழுந்த
வுயிர்செகுக்குந் தீமை யோர்க்கு
மூவணங்காட் டியமுதல்வர்க் கொருமுதலாய்
நின்றமுதற் கடவு ளாய
பூவணங்காட் டியைமருமத் திடைதரித்த
பொருளிவன்கை பொறித்த செந்தீட்
டாவணங்காட் டிலுமுவந்து தரும்பரம
பதமென்று லறைவ தென்னே. (உ0)

2177 ஊனிவர்செஞ் சுடராழித் தடக்கையினன்
றிலகமுத லொருமூ வர்க்குங்
கானிவர்மெய்த் தவமுனிவர்க் கொருதிலகம்
வசிட்டனெனுங் காட்சி யாளன்
வானிவர்வண் புகழ்த்தருமன் குருகுலத்தார்க்
கொருதிலக மாசி லாத
தேனிவர்பைந் தார்வழுதி கிழவன்மா
பினுக்கிவனோர் திலக மாமே. (உக)

வேறு.

2178 செல்வத் துறைக்குப் புரந்தரனைத்
தேருந் தொறுஞ்சிந் தையையுருக்குங்
கல்வித் துறைக்குத் தமிழ்முனியாய்க்
காட்சித் துறைக்குக் கவினழியாச்
சொல்வித் தகமன் மதனெனலாய்ச்
சுரபி யெனத்தண் ணளிபயின்ற
நல்வித் தகனெண் ணிரண்டெனலாம்
பருவ மதனை நயந்தானே. (உஉ)

இருபதாவது திருமுடியடைவுச்சருக்கம் முற்றும்.

---

## உக. பெண்பேசுசருக்கம்.

2179 பெருவாழ் விணங்கும் பொறையுடையோன்
பேராச் சிறப்பிற் புவிதனக்கைந்
தருவா யறிஞர் தவந்தழைப்பத்
தருமந் தழைப்பத் தழைதருநாண்
மருவார் மலர்ப்பெ ணணங்ககலா
மாயோ னுறைவண் பரிசாரத்
திருவாழ் மார்ப ரிடத்துதித்த
திருவின் றிறமிங் கினிப்புகல்வாம். (க)

வேறு.

2180 மருந்துதித் ததனுட் டோன்று
மலருளாட் கமைந்த பொற்பு
மருந்துதிக் கமைந்த கற்பு
மவனியாள் பொறையும் விண்ணோர்
பெருந்துதிக் கமைந்த மேன்மைப்
பெண்ணியல் பெருக்கி வேலை
பொருந்துதிக் கமைந்த மண்மேல்
வெளிவரும் புதுவ தன்னுள். (உ)

2181 சுழித்தெழு துவதொன் றில்லாச்
சுருதிக்கு முதலே நிற்ப
தழித்தெழு துவதொன் றில்லா
வரியெனும் பெரிய நாமங்
கழித்தடங் கடற்கண் ணார்தங்
கற்பினை யெண்ணும் போழ்தம்
மொழிக்குமுன் னிற்ப தந்த
முற்றிழை மடந்தை கற்பே. (ஙு)

2182 பெருங்குலத் தொண்மை சான்ற
பெருங்குடிப் பிறந்த பெண்ணிற்
கருங்கல மனைய தொன்று
யாவியிற் சிறந்த தாகிச்

சுருங்கலின் றூய நாண
முதலிய நான்குந் தோற்ற
மொருங்குடை மையினுன் ஞால
முடையநங் கையெனு மன்றே. (ச)

2183 சேயென மலரிற் றோன்றுந்
திசைமுகன் றனைப்பெற் றாளைத்
தாயென வுடைய நங்கை
தண்ணளி யுடைய நங்கை
வேயெனத் திரண்ட தோளார்
விரும்புமுத் தமநன் கற்பு
நீயெனக் குடைய நங்கை
யெனவுரை நிகழ்த்து நீராள். (ரு)

2184 பூசுரர் துறவு பூண்டு
பொறியடக் கினர்க ளில்லின்
மாசற வைகு மாதர்
மணமனை புகுந்து கற்பிற்
காசிக ளறைவ திம்ப
ரருந்ததி யெனலாய் வாழ்ந்த
நேசுடை நங்கை போலச்
சிறந்திரென் றுரைப்ப தாமே. (சு)

வேறு.

2185 நள்ளிருட் பிழம்பினை நளினப் போதினு
னள்ளிமென் சுருள்படுத் தழகி னூற்றபின்
றெள்ளிதி னெறித்துநீண் டடர்ந்து செவ்விகூ
ரொள்ளிதி னறுவிதா யமைத்த வோதியாள். (எ)

2186 வளரியல் பின்றியும் வைக றோறுமெய்
தளரியல் பென்பதுந் தவிர்ந்து தெண்ணிலாக்
கிளரியற் பிறைநுதற் கோலங் கீதவண்
டுளரில விதழினு ருணர்வை யுண்ணுமே. (அ)

2187 உருவிலா னுருகெழு சிலையு மும்பர்கோன்
செருவிலாண் டொழில்புரி சிலையு நாணுறத்
தருவிலாம் வனப்பின புருவந் தண்குமிழ்
பொருவிலா மூக்கெனப் புகழ்தல் புன்மைத்தே. (௯)

வேறு.

2188 நெய்யுண் டன்றினர் நீணிறம் போழ்ந்தவர்
மெய்யுண் டாவியை மீளவு முண்டுபோய்த்
துய்யுண் செஞ்சுடர் தூண்டுர னுண்டவேன்
மையுண் செவ்வி மதரரிக் கண்களே. (௧௦)

வேறு.

2189 நித்திலத் திரளினை நிரைத்த தாமெனும்
உத்தம முறுவலுக் குவமை யில்லையால்
வித்துரு மமுமமு தளாய மென்மைகூர்
தத்துவம் பெறிலிதழ்க் குவமை சாலுமே. (௧௧)

2190 திருந்தின புலமையோர் செவியுஞ் சிந்தையும்
பொருந்தின வியற்றமிழ் பொருவு மேன்மையும்
அருந்தினர் புறத்தொரு சுவைக்கென் றன்புறு
மருந்தின தினிமையும் வளர்க்கும் வாணியே. (௧௨)

2191 பங்கயத் திறைவனம் பரத்து வெண்மதி
சிங்கலுற் றமையுறீஇச் சிறப்பின் மாசறக்
கங்குலும் பகலுமோர் காட்சித் தாய்ப்புணர்
மங்கல மதியமாம் வதன மென்பதே. (௧௩)

2192 குண்டலம் புனைந்தொளி குலாய வள்ளையக்
தண்டெனக் கவின்பெறத் தழைந்த காதுதா
முண்டதுட் புகப்புறந் தோன்று மொண்மைசால்
கண்டமு நாகிளங் கமுகின் வண்ணமே. (௧௪)

2193 தண்ணற வருவிநீ ரருவி தாழ்ந்துவீழ்
வெண்ணிற மழைதவழ் வெற்பிற் றோன்றுவ
கண்ணவிர் மணிவடந் தரளக் காழ்கொளீஇப்
பண்ணமைத் தெழுந்தவெண் படாம்பெய் கொங்கையே.()

வேறு.

2194 வீக்கம் பற்றிய வெம்முலை மேனிலத்
தாக்கம் பற்றிய தாங்கொ ரளவையா
மோக்கம் பற்றிய மூதுணர் வாலன்றி
நோக்கம் பற்றரி தாநுண் மருங்குலே. (கசு)

வேறு.

2195 இணையென வெழிலிசைந் தெழுந்த மேதகு
பணையென வணையெனப் பணைத்த தோளிணை
கணையெனத் திரண்டதாட் கமலப் போதுகைத்
துணையெனச் சிறந்தன துணியுங் காலையே. (கஎ)

வேறு.

2196 நிறங்கொள் வாழை நிரலிணைத் தண்டையே
குறங்கின் செவ்விக் கிணையெனக் கூறுவார்
மறங்கொள் வாளிகள் வைகிய தூணியின்
றிறங்க ளென்பர் திரள்கணைத் தாளையே. (கஅ)

2197 நறவ ளிக்கு நளினையைத் தோய்ந்துமெய்
யுறவ ளிப்பவ ளெண்மையைத் தேர்ந்துவாழ்
துறவ ளிப்பவர் சூழ்ச்சியி னுமையே
புறவ டிக்கிணை யென்று புகல்வரே. (ககூ,

வேறு.

2198 உம்பர்மால் வரைசுமந் தொசிந்த மின்கொடிக்
கம்பமே தாமுதிர் கதிசெய் வாயெனிற்
றம்பமே துளத்தெனத் தாழ்ந்து வீரிடும்
பைம்பொனூ புரத்தன பதுமத் தாள்களே. (உo)

2199 நலம்புனை யிலதையின் னளிதெண் ணீரினிற்
குலம்புனை சினைகளிற் குலாய பன்மலர்
வலம்புனை புலந்தரு வரத்தின் மாசிலாப்
புலம்புனை கொடிபயந் தனைய பொற்பினள். (உக)

2200 கண்ணக னிலத்தினுட் கவின்பு ரப்பன
வெண்ணருங் கலங்களே யவையு மீங்கிவள்
வண்ணமெய் தாக்கவின் கைக்கொள் வாழ்வினுற்
பெண்ணருங் கலமெனச் சிறந்த பெற்றியாள். (உஉ)

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35. | *திருமந்திர நூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4—8—0. இதுவரை 34 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.